Registered No. M. 2830 "SIDDHANTHAM"
Vol 42 — No. 7

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 42 | சௌமிய ஆடி 1969 ஜூலை | இதழ் 7

உள்ளுறை பக்கம்

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு.

சென்னை மயிலாப்பூர் குமரகுருநாத முதலி தெருவி லுள்ள சமாஜ அலுவலகத்தில் 27—7—69 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, மாதக் கூட்டம் முதலியன பற்றி ஆலோசிக்கப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர்.

நம் சமாஜச் சார்பில் சைவப் பெரியார் திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் முதற்சமயக் கட்டளைப்படி 13—6—69 வெள்ளி மாலையில் ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்தஜன சபையில் திருப்புகழ்ச் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை பி. ஏ; பி. டி. அவர்கள் "பாம்பனடிகள்" பற்றி மிகச் சிறந்த விரிவுரையாற்றி னார்கள்.

நம் சமாஜமும் ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை யும் சேர்ந்து 16—6—69 திங்கட்கிழமை மாலை ஒரு சிறப் புக் கூட்டம் சபையில் நடத்தியது. அவ்வமயம் மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் போந்து அருளுரை வழங்கினார்கள்.

நம் சமாஜச் சார்பில் திருவாளர் அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் நன்கொடையான நம் சமாஜக் கட்டட டிரஸ்டின் ஆதரவில் 20—6—69 வெள்ளியன்று திருமயிலைக் கபாலீச்சுரத்தில் 'மாணிக்கவாசகர்' பற்றி சித்தாந்தப் புலவர்மணி திரு. க. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள் சிறந்த விரிவுரையாற்றினார்கள்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 42	சௌமிய ஹு ஆடி 1969 ஜூலை	இதழ் 7

திருவெண்நாவற் பதிகம்

ஆசிரியர்

மூவர் தேவாரங்களில் ஆங்காங்கு தல விருட்சக்குறிப்புகள் காணப்படும். பழந்தமிழ் நாட்டில் சிவபெருமான் அரு உருவத் திருமேனியாக ஒரு மரத்தினடியில் எழுந்தருளி இருந்தமை கண்டு ஆங்காங்கு வாழ்ந்த சைவ நன் மக்கள் அத்திருமேனியை முழுமுதற் பொருளாகவே எண்ணி வழிபட்டு உய்ந்தார்கள். இவ்வாறு இத்திருமேனி எழுந்தருளிய இடங்கள் பிற்காலத்தில் கோயில்களாக வளர்ந்தன. முதலில் மண் கோயிலாக இருந்த பின்பு செங்கற்கோயிலாகவும் மரக்கோயிலாகவும், பின்னர் பல்லவர் சோழர் காலத்தில் பெருங்கற்றளிகளாகவும் எடுக்கப்பட்டன.

மரத்தின் கீழ் பெருமான் எழுந்தருளியிருந்தார், என்று பேசும் பொழுது நாம் மரத்தை மாத்திரம் கருதவில்லை. அற்பப் புல்லும, யாரும் வெறுக்கும் எருக்கும், முள் நிறைந்த களாவும் கள்ளியும், இவை போன்ற பலவும் இறைவன் உறைவதற்கு நிழல்தந்த தாவரங்களாகப் போற்றப்பட்டன. தர்ப்பைப்புல் நள்ளாற்றில், களா, கரிவலம் வந்த நல்லூரில்; முல்லைக்கொடி கடவூரில், பெருமரங்களாகிய ஆலும் அரசும் ஆலங்காட்டிலும் ஆவூரிலும், தலவிருட்சங்களாக அமைந்தன,

இவ்வாறு அமைந்தவற்றுள் பலாவும் ஒன்று. பலாவில் குறும்பலா என்பது ஒருவகை. இது தென்பாண்டி நாட்டுத் திருக்குற்ருலத்தில் தல விருட்சமாக அமைந்துள்ளது. குற்ருலத்துக்குப் பதிகம் பாடின சம்பந்தமூர்த்தி, குறும் பலாவைச் சிறப்பித்து அதற்கென்றே தனியாக ஒரு பதிகம் பாடினுர். இதைக்குறிப்பிடுகின்ற சேக்கிழார் ''குற்ருலம் குறும் பலா கும்பிட்டேத்திச் சென்ருர்'' என்று கூறுகிருர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மற்ருெரு தல விருட்சம் திரு வெண்ணுவல் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிருேம். வெண்ணுவல் திருவானைக்காவில் தல விருட்சமாக உள்ளது. திருவானைக்கா சென்று பணிந்த திருஞானசம்பந்தர் அத்தலத் துக்கு மூன்று பதிகங்கள் பாடினுர். இவை இரண்டாம் திருமுறையில் ஒன்றும் மூன்ரும் திருமுறையில் இரண்டுமாக உள்ளன. இவற்றுள் முதற்பதிகத்துள் ''திருவெண்நா வலுளாய்'' என்றே பெருமானைப் பாடுகிருர்; இங்கு ஆனைக்கா என்ற பெயரைச் சொல்லவே இல்லை. இப்பதிகம் முழுமையும் அகத்துறையில் அமைந்தது. வெண்ணுவல் உளாய் என்று தலைவி அரற்றி நைகிருர் என்று சொல்லும் தோழி கூற்ருக உள்ளது. இரண்டாம் பதிகத்தில் ஆனைக் காவில் அண்ணல் என்று மட்டுமே பாடுகின்றவர், மூன்ரும் பதிகத்தில் மயேந்திரம், கயிலை, ஆரூர், ஆனைக்கா என்று நான்கு தலங்களை ஒருங்கு சேர்த்துப் பாடுகின்ற இடத்தில் 3, 7 ஆகிய இரு பாடல்களில் வெண்ணுவிலாரும், வெண்ணு வில் விரும்பு மயேந்திரரும் என்று வெண்ணுவலைச் சிறப்பித்தே கூறுகிருர். அன்றியும், சம்பந்தர் புராணத்தில் சேக்கிழார் ''ஆனைக்காவில் வெண்ணுவல் மேவிய மெய்ப்பொருளை நன்று இறைஞ்சி முன் எழுந்தார்'' என்று பாடுகிரா. (2248–49) இவற்றை நன்கு பார்க்கும் போது சம்பந்தர் பாடல்களில் பின்னிரு பதிகங்களும் (3, 5, 3, 109) திருவானைக்காவுக்கு உரியன வாயிருக்க, இரண்டாந் திருமுறைப் பதிகமாகிய 23–திருவானைக்காப் பதிகம் அவரால் திருவெண்நாவற் பதிக மாகவே பாடப்பெற்றதென்று கொள்ளத் தோன்றுகிறது. திருவெண்ணுவலைப் பாடியது திருவானைக்காவுககே உரிய தாயினும், இதுவும் திருக்குறும் பலாப் பதிகம போலத்தனித் திருவெண்ணுவற் பதிகம் என்றே கொள்ளத்தக்கது.

இங்கு நாம் எடுத்துக் காட்டியது, சம்பந்தர் இரண்டு தல விருட்சங்களுக்குத் தனிப்பதிகம் பாடினுர் என்பதும் ஒன்று திருக்குறும் பலா மற்றது திருவெண்ணுவல் என்பதும் ஆகும்.

பாரசிகக் கவிஞனும் பைந்தமிழ்ச் சித்தரும்

(சிவகாமி அம்மையார்)

I உலக இயற்கை :— இக்கால மனிதன்.

இருபதாம் நூற்றாண்டு மனிதன் அறிவிலே தெளிவுள்ளவன். அறிவு காட்டுகின்ற வழியிலே நடக்கின்றவன்-அறிவையே நம்பி வாழ்கின்றவன். கண்ணாற் காணுகின்றவை அனைத்தும்-பொறிபுலன்களுக்குப் புலனாகின்றவை அனைத்தும் அவனால் நம்பப்படுகின்றன—ஒப்புக்கொள்ளப்படுகின்றன. வாழ்க்கையின் மேற்பரப்பையே—ஆரவாரத்தையே உண்மையான வாழ்க்கை என்று நினைத்துத் தடுமாறுகின்றான். "ஞாலம் நடுங்கவரும் கப்பல்களைக் கட்டுவதும்—விண்ணை அளந்துவிடும் ஏவுகணைகளைப் படைப்பதும், ஒப்புயர்வற்ற சாதனைதான்—தூரத்தையும், காலத்தையும் குறுக்கிவிடுவது வியப்பிற்குரியதுதான். ஆனால் இவையெல்லாம் புறவுலக ஆராய்ச்சியே. தன்னுள்ளே ஒரு உலகம் இருக்கின்றதே; அதை அவன் மதித்தானா? ஆராய்ந்தானா? அல்லது அப்படி ஆராய்ந்தவர்களின் சொல்லைச் செவிமடுத்தானா? இரண்டும் இல்லை. இருபதாம் நூற்றாண்டு மனிதனின் தலை பெருத்து விட்டது. நெஞ்சு சிறுத்து விட்டது இல்லாவிட்டால் இத்தனை போர்கள் ஏன்? நாடுகள் சின்னப் பிள்ளைகளைப்போல அடிக்கடி ஒன்றோடொன்று மோதிக்கொள்வது ஏன்? சாதியின் பெயராலும், சமயத்தின் பெயராலும், நிறத்தின் பெயராலும், நாட்டின் பெயராலும் இத்தனைப் போராட்டங்கள் ஏன் நிகழுகின்றன. ஒவ்வொரு சமுதாயத்திலும் ஏற்றத்தாழ்வுகள் ஏன் ஏற்படுகின்றன? மனிதனுக்கு மனிதன் ஏன் கைகட்டி நிற்கின்றான்? மனிதனை மனிதன் ஏன் சுரண்டுகின்றான்? பொய்மையும், பொறாமையும், கற்பழித்தலும், கொலை செய்தலும் ஏன் பெருகி விட்டன? ஆம் இவற்றிற்கெல்லாம் காரணம் 20. ஆம் நூற்றாண்டு மனிதன்

மூளையை மட்டும் வளர்த்துக் கொண்டான். தன்னுடைய வாழ்க்கையை எந்திரங்களோடு பிணைத்துக் கொண்டான். எந்திரங்களோடு எந்திரமாகத் தானும் சுழன்றான். உலகை நினைத்தவன் தன்னை—மனிதனை மறந்து விட்டான். இந்த மறதி இன்று அவனுக்குத் துன்பத்தைத் தருகின்றது. இந்த மறதி அவனை மனிதனாக நடமாடவிடவில்லை. இந்த மறதி அவனையே தொலைத்து விடுமோ, என்று அஞ்ச வேண்டியுள்ளது. "Struggle for existence" என்ற டார்வினின் கொள்கையைத் தனக்கே பொருத்திப் பார்த்துக்கொள்ளவேண்டிய நிலையில் இன்று அவன் தடுமாறுகின்றான். இந்த மனிதனுக்காகவே வள்ளுவர் ஒரு குறள் எழுதினார். அது

> " அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண் பில்லா தவர் "

என்பது. எத்தனைதான் மனிதன் தன்னுடைய அறிவைப் பற்றிப் பெருமை கொண்டபோதிலும் மனம் வளரா விட்டால் அவன் மரமே. மரத்திற்கு மனமேது? எண்ணமேது? மனத்தையும், எண்ணத்தையும் உடைய மனிதன் அவைகளை வளர்த்துக் கொள்ள வேண்டாமா? புற உலகை அறிவால் அளப்பது வரவேற்கப்பட வேண்டியது தான். ஆனால் அங்ஙனம் புறவுலகையே புரட்டுகின்ற அளவிற்கு ஆராய்ச்சி அறிவுடைய தன்னை உண்டாக்கிய பெருங் கருணையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாமா? தெரிந்து கொள்ள வேண்டும்—மனிதனாக நடமாட வேண்டும். அதற்கு இலக்கியங்களும், மெய்யியல் [தத்துவ] நூல்களும் துணைபுரிகின்றன. பொய்தீர் காட்சியையுடைய பெருந்தகையாளர்களின் அடிச்சுவடுகள் அவைகளுள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் அந்தத் தெய்வ மலர்களின் வாழ்க்கையையும் அனுபவத்தையும் இம்மானிடச் சமுதாயம் பின்பற்ற வேண்டும். அவர்களிடம் நம்பிக்கை வைக்கவேண்டும் கண்டதே காட்சி கொண்டதே கோலம என வாழ்தல்

எளிது—கட்டுப்பாட்டுடன் வாழ்வின் இறுதி இலக்கை நோக்கிப் பயணம் செய்வது அருமையினும் அருமை. அந்த அருமையில் மலர்வதுதான் "மக்கட் பண்பு"

இனி வாழ்வின் தூய நோக்கத்திற்குத் துணைபுரிவன ஆன்றோர் கருத்துக்களும்—அவைகளில் நம்பிக்கையுமதான் என்றால் அக்கருத்துக்களைக் கொண்ட நூல்களை எங்ஙனம் கண்டுபிடிப்பது. ஓர் அறிஞர் குறிப்பிடுகின்றார். "நல்லவனும் அழுகின்றான், விபசாரியும் அழுகின்றாள், பத்தினியும் அழுகின்றாள். இவைகளில் எது உண்மையான கண்ணீர் என்று கண்டுபிடிப்பது?" இதுபோலப் பல்லாயிரக் கணக்கில் நூல்கள் பெருகிப் பல்கியிருக்கின்ற இக்காலத்தில் எவற்றை உண்மையான—வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாகக் கொள்வது? இது பற்றி அஞ்சவேண்டுவதில்லை! ஏனென்றால் மிக நல்ல நூற்களை உலகில் மிகக் குறைந்த பேர்கள் தான் படிப்பார்கள்!

II இருவகைப் பார்வை :—

நாம் நல்ல நூற்களையே தேர்ந்தெடுப்பினும் அவற்றைச் செய்தவர்கள் உலகம் போற்றுபவர்களாக இருப்பினும், அவற்றுள் உலகைப் பற்றி இருவகைப் பார்வை இருப்பது இயல்பு! என்னை? ஊழியிலிருந்து மறு ஊழிவரை செல்லும் கால வெள்ளத்தில் பல்லாயிரங்கோடி அண்டங்கள் அழிந்தும் தோன்றியும் நிலைபெற்றும் நடக்கின்ற இப்பேரியக்கத்தை உணர்ந்து அப்பேரியக்கத்திற்குக் காரணத்தைத் தெளிந்து, அக்காரணத்தோடு ஐக்கியப்பட, வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டும் என்பது ஒரு பார்வை, இன்னொரு வகைப் பார்வை, "இவ்வுலகத்தைத் தான் பார்க்க முடிகின்றது; இப்பொழுது நிகழ்வது தான உண்மை,—பிறவெல்லாம் தற்செயலாக நிகழ்வன." என்று அறிவால் முடிவு கட்டி "இங்கே களித்திருப்பதுதான் இன்பம்" என்பது. முன்னதை விடப் பின்னதற்கு அதிகச் செல்

வாக்கு இருக்கலாம். ஏனென்றால் அது சுலபமானது. மனக் குரங்கிற்கு ஏற்ற குதிரை!

அன்றாட வாழ்க்கையில் நம் கண் முன்பு இருக்கின்ற வகைகளை எடுத்துக் கொள்வோம். எல்லாமே ஒரு காரணம் பற்றியே இருக்கின்றன. இயங்குகின்றன. எடுத்துக் காட்டாக ஒரு நாற்காலியை எடுத்துக் கொள்வோம். அது ஏன் செய்யப்படவேண்டும்? அது தற்செயலாய்த் தோன்றுவது இல்லை! அதை ஆக்க ஒரு மூளை தேவைப்படுகின்றது! அது ஆக்கப்படுவதற்குக் காரணமாக அதன் பயன் இருந்தது. அதன் பயனுக்குத் தக்கவாறு அது அமைக்கப்பட்டது. இதற்கெல்லாம் ஒரு அறிவு சிந்தித்துச் செயல்பட வேண்டி இருந்தது. எனவே கேவலம் ஒரு நாற்காலியைச் செய்வதற்கே அதன் பயனை உணர்ந்து அத்தேவைக்கேற்ப அதனை அமைக்கச் சிந்தித்துச் செயல்பட ஒரு அறிவு தேவைப்பட்டதென்றால், இப்பல்லாயிரங் கோடி அண்டங்களையும் அவற்றிலுள்ள கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரிலிருந்து மிகப் பெரிய உடலங்களைக்கொண்ட உயிரினங்களையும், இவ்வுலகையே ஆராயும் வல்லமையுள்ள மனிதனையும் படைக்க ஒரு பேரறிவு தேவைப்பட்டிருக்குமல்லவா? இயற்றையெல்லாம் உணர்ந்த ஞானிகள் அப்பேரறிவை அடைவதற்குப் பல்வேறு அனுபவங்களைப் பெற்று உண்மை தெளிந்து உலகிற்கு உணர்த்தினர். இன்னொரு சாராரோ இங்கே கண்முன் காண்பதை எங்ஙனம் பெருக்கலாம்—எங்ஙனம் அனுபவிக்கலாம் என்று எழுதுகின்றனர். இரண்டும் தேவைதான். ஆனால் மனித சமுதாயத்தின் நோக்கமென்னவோ முன்னவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாகத்தான் இருக்கவேண்டும்.

இனி நாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கு வருவோம். முற்கூறிய ஞானியர்களுள் தமிழகச் சித்தர்கள் இடம் பெறுகின்றனர். பிற்கூறிய பொருளியல் அறிஞர்களை உமார் கய்யாம் தழுவிக் கொள்ளுகின்றார். விரிவாகக் காணுவோம்.

II சித்தர்கள்

சித்தர்கள் என்றால் அறிவொளி பெற்றவர்கள் என்று கூறலாம். சித்—என்றால் அறிவு. அவர்கள் நினைத்ததைச் செய்யும் ஆற்றல் பெற்றிருந்தனர். பொறிவாயில் ஐந்தவித்தார்கள். முதலை நினைத்து முதலோடு கூடிய முத்தர்கள். தமிழகத்தில் பதினெண்மர் இருந்திருக்கின்றனர். அவர்களின் பாடல் தொகுப்பு "ஞானக்கோவை" என்ற பெயருடன் திகழ்கின்றது. இந்நூல் மக்களிடையே அத்துணைச் செல்வாக்குப் பெறவில்லை. ஏனென்றால் அதனுள் கூறப்படுகின்றவை மனித வாழ்க்கையின் கசப்பான உண்மைகளும், இறை நிலையை உணராத சாதாரணப் பொதுமக்களுக்குப் புரியாத உண்மைகளுமாகும்.

மனிதன் எப்பொழுதும் உண்மையை நேரடியாகக் காண அச்சப்படுகின்றான்—அருவருப்படைகின்றான். அதனால்தான் உண்மை பேசுகின்றவன் உலகியலில் துன்பப்படுகின்றான். ஒருவருமற்ற இடத்தில் அநாதையாகக் கிடக்கும் பிணத்தை நம்மில் எத்துணை பேர் தனித்துச் சென்று பார்க்க வல்லவர்கள்? அதுவே வேறு பிராணிகளின் உடலானால் ஓரளவு பெரும்பாலோர்க்கு அச்சமிருப்பதில்லை. ஏன்? நம்முடைய உருவிலே 'சாவு' என்ற உண்மையைக் காணும்போது நாம் அஞ்சுகின்றோம். அதன் முழுத்தன்மையைப் புரிந்துகொள்வதுமல்லாமல் அந்த உண்மையை நம்மால் பொதுவாக எடுத்துக் கொள்ள முடிவதில்லை.

மனிதனுக்கு மிகவும் கசப்பான உண்மையாகப்படுவது "தான் சாவோமென்பது" அதை அவன் பெரும்பாலும் மறந்துவிட்டு வாழுகின்றான். எந்த நிமிடத்திலும் தான் இறந்து விடலாம் என்பதை மறக்கிறான். தனக்கு யாரோ நூறு ஆண்டுகளுக்கு ஒப்பந்தமாகச் 'சாவு வராது' எழுதிக் கொடுத்திருப்பது போல எல்லாக் காரியங்களையும் செய்து வருகின்றான். இப்படிப்பட்ட மறதியைத்தான் 'கார்க்கி' மனித 'சமுதாயத்திற்குக் கொடுக்கப்பட்ட

சொத்து' என்று கூறுகின்றார். இந்த மறதியைச் சித்தர்கள் சுட்டிக் காட்டினர். நாளும் வளர்வதாகத் தன்னை நினைத்துக் கொண்டு ஏமாறுகின்றான் மனிதன். உண்மையில் அது வளர்ச்சிதானு? இல்லையே! ஒவ்வொரு நாளும் இடுகாட்டை நோக்கி முன்னேறும் ஒரு அடிச்சுவடு அல்லவா? இங்ஙனம் உண்மையை உண்மையாக உணராமல்—உண்மையை நேரடியாகச் சந்திக்காமல்—அதைப் பிறழ நினைந்து உண்மை போல மயங்கிநிற்கின்ற தன்மையைச் சித்தர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

உலகில் எதைப் பார்த்து "இது என்றும் நிலைத்து நிற்பது" என்று சொல்வது? தோன்றியதெல்லாம் அழிகின்றது. உருவு திரண்டவைகளெல்லாம் உருவற்றுப்போகின்றன. நிலைத்திருப்பன போலத் தோன்றினும் அன்றாடம் மாற்றமடைந்து கொண்டே இருக்கின்றன. இந்த மாற்றத்தை "அலெக்ஸ் கேரல்" ஒரு ஆற்றுடன் ஒப்பிடுகின்றார். "Like a river we are both change and Permanence" எனவே மாற்றமடையக் கூடியதும்—நிலையற்றதுமான உடலைப் பேணுதலே வாழ்க்கையாகுமா? அவ்வுடலால் அனுபவிக்கக் கூடியன உண்மையாகுமா? அவையெல்லாம் உண்மைபோல இருந்து கனவாய்ப் போய் விட்டன என்கிறார் பட்டினத்தடிகள்.

"மையாடு கண்ணியும் மைந்தரும் வாழ்வும் மனையுஞ்செந்தீ
ஐயா! நின்மாயை உருவெளித் தோற்றம் அகிலத்துள்ளே
மெய்யாயிருந்து நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே."

உண்மையாய் இருந்தவை நாட்செல நாட்செல பொய்மையாகவும்—எங்கோ கேட்ட பழங்கதையாகவும்—உண்மையில் நிகழ்வது போலவே இருந்து விழித்தபின் பொய்மையாகின்ற கனவாகவும் கால வெள்ளத்திலே மெதுவாகப் போய்விட்டன. இதைச் சேக்ச்பியர்,

" To-morrow and to-morrow and to-morrow
Creeps in this petty pace from day to day
To the last syllable of recorded time
And all our yesterdays have lighted fools
The way to dusty death."

என்று இன்னொரு வகையில் கூறினர். எல்லாம் கனவுதான். கனவிலே காணும்போது உண்மை—விழித்தால் பொய்மை. இவற்றை யெல்லாம் நீரிலே எழுதிய எழுத்து என்கின்றார் இடைக்காட்டுச் சித்தர்.

" எப்பொருளும் கனவென்றே தும்பீ பற - உல
கெல்லாம் அழியுமென்றே தும்பீ பற
அப்பில் எழுத்துடல் என்றே தும்பீ பற - என்றும்
அழிவில்லாதது ஆதியென்று தும்பீ பற."

இங்ஙனம் நீர்மேல் எழுத்துப் போல் இருக்கின்ற—உடலங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இவற்றை நாம் என்ன செய்கின்றோம்?

" நந்தவனத்திலோ ராண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி!"

என்று கடுவெளிச் சித்தர் பாடுவது போல உலகியல் ஆசைகளில் அகப்பட்டு உடலங்களை அழிக்கின்றோம். ஆம்—நல்லதோர் வீணை செய்து அதை நலங்கெடப் புழுதியில் எறிந்து விடுகின்றோம். எனவே என்ன செய்ய வேண்டும். பட்டினத்தார் கூறுகின்றார்.

" பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும், மறந்தன உணரும்
புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும்
....
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன உவப்பாம்"

இது உலகியல்பு. எப்பொழுதும் மாறிக்கொண்டே இருப்பது அதன் இயல்பு. உயிரளவில் மட்டுமல்லாமல் உடலளவில் எடுத்துக் கொண்டாலும் "தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்" என்பது இயற்கை தானே! மண் முதல் ஐம் பூதங்களோடும் உடல் கலந்த பின்-அந்த மூலகங்கள் மற்ருெரு உடலுக்குள் வரவில்லை யென்று எப்படிச் சொல்ல முடியும்? எனவே

"உலகப்பொய் வாழ்க்கையை, உடலை ஓம்பற்க" அதாவது அவைதான் நித்தியமென்று வாழ்நாட்களை வீணே கழித்து விட வேண்டாம் என்பது. சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத முடியும். உடம்பைக் கொண்டுதான் உண்மையைக் காணமுடியும். அதனுற்ருன் "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே." என்கின்ருர் திருமூலர். ஆனுல் உடற்பற்று எந்த அளவிற்கு வேண்டும் என்பது தான் நினைக்க வேண்டுவது. உடற்பற்றின் எல்லைக்கே வந்து விடுகின்ற மனிதனைப் பார்த்துத் தான் சித்தர்கள் நிலையாமைக் கொள்கையை வலியுறுத்துகின்றனர்.

பிறவிகளை நம்புகின்றவர் :-

சித்தர்கள் பல பிறவிகளில் நம்பிக்கையுடையவர்கள். பொதுவாக இந்திய ஞானிகள் யாவரும இதில் நம்பிக்கை யுடையவர்களே! அப்படிப்பட்ட நம்பிக்கைக்குச் சான்றுகள் பல கிடைத்துள்ளன. மெய்யொளி பெற்ற ஞானிகளும் இதனை வலியுறுத்தியுள்ளனர். திருவள்ளுவரே, "பிறவிப் பெருங் கடல்" என்று ஒத்துக் கொண்டபின் வேறு என்ன வேண்டியிருக்கின்றது. பட்டினத்தார்

':பிறந்தன பிறந்தன பிறவிகள் தோறும்
கொன்றனை அனைத்தும் அனைத்தும் நினைக்கொன்றன
தின்றனை அனைத்தும் அனைத்தும் நினைத்தின்றன
பெற்றனை அனைத்தும் அனைத்தும் நினைப்பெற்றன'

என்று பாடுகின்ருர். ஆகவே உலகினுள் நாம் இன்பமாகக் கருதும் சின்னாட்களும் நிலைபற்றனவாக இருக்கின்றன.

நிலையற்றதற்காக என் வாழ்வை வீணுக்க வேண்டும்? பொய்மையென்னும் மதுவில் மயங்கி உண்மையை என் மறக்க வேண்டும்? மறுக்க வேண்டும்? இந்த உண்மையை அடைவதற்கு வழியுண்டா? வழியுண்டு! என்னவழி! மனத்தை அடக்கிச் சும்மா இருப்பது! மனத்தைப் புருவ மத்தியில் நிறுத்தி உள்ளொளியைப் பெருக்குவது. சித்தர்கள் வழி தெளிந்த வழியாக இருக்கின்றது. அவர்களிடத்தில் மயக்கம் இல்லை. கொங்கணர் பாடுவதைப் பாருங்கள்.

"உச்சிக்கு நேராயுண்ணுவுக்கு மேல்நிதம்
வைத்த விளக்கும் எரியுதடி
அச்சுள்ள விளக்கு வாலையடி – அவி
யாம லெரியுது வாலைப் பெண்ணே"

இவ்வுள்ளொளி பெருகினுல் என்ன அனுபவங் கிடைக்கும்?

"சிலம்பொலி யென்னக் கேட்குமடி -- மெத்தச்
சிக்குள்ள பாதை தடுக்குமடி
வலம்புரி சங்கமு மூதுமடி – மேலே
வாசியைப் பாரடி வாலைப் பெண்ணே!"

இனி அந்த அனுபவத்தின் முடிவு என்ன?

"ஆயிரத்தெட்டு வட்டமும் கண்டேன்
அந்த வட்டத்துள்ளே நின்றதுங் கண்டேன்
மாயிரு ஞாலத்து நூற்றெட்டும் பார்த்தேன்
மந்த மனத்துறும் சந்தேகம் தீர்ந்தேன்!"

என்று இடைக்காட்டுச் சித்தர் பேசுகின்றூர். ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அளக்கின்ற சக்தி நம்முள்ளே புதைந்து கிடக்கின்றது. அந்தச் சக்தியைக் கண்டெடுப்பது தான் மிக அருமையுடையது. அந்தச் சக்திப் புதையலை இந்த உடலாகிய மண்மேட்டிற்குள்ளே புதைத்து, அதை ஆசையென்கிற பூதம் காத்து வருகின்றது. அந்த ஆசைப் பூதத்தை அழிக்க வேண்டும். அதனுற்றுன் வள்ளுவப் பெருந்தகையும்,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"

என்றார்.

சித்தன் போக்கு 'சிவன்' போக்கு என்பார்கள். உலகின் கண்ணுக்கு அவர்கள் பித்தர்கள். "நாட்டார் நகைசெய்ய நாம் மேலை வீடெய்த" என்று மணிவாசகரும்,

"காட்டானை மேலேறிக் கடைத்தெருவே போகையிலே
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்ப்பதென்றோ
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்த்தாலும்
காட்டானை மேலேறி என் கண்ணம்மா!
கண் குளிரக் காண்பேனோ!

என்று அழுகணிச் சித்தரும் கூறுவதைக் காணலாம்.

இப்படி மனத்தை அடக்கி உள்ளொளியைப் பெருக்கிப் பெறுகின்ற ஆனந்தத்தின் வித்து வேறு எங்கேயும் இல்லை! நம்முடைய அகத்துள்ளேயே இருக்கின்றது.

"ஏட்டிலே எழுதும் நூல்கள் எத்தனை படித்தும் நீதான்
காட்டிலே எறிந்த திங்கள் கானலிற் சலம் போலானாய்
நாட்டிலே தெய்வமென்று நடந்தலையாமலுன்றன்
கூட்டினில் நாகைநாதர் குறிப்பறிந்துணர்வாய் நெஞ்சே!"

புறத்தில் பயனில்லை அதனாற்றான் "நட்ட கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையிலே" என்றார்.

இங்ஙனம் சித்தர்கள் மனித வாழ்க்கையை முற்றும் உணர்ந்தவர்களாய் அம்மனிதவாழ்விற்கு அப்பால் புதைந்து கிடக்கின்ற பேருண்மையை உணர்ந்தவர்களாய் இருந்தார்கள். அப் பேருண்மையை அடைவதற்கு அவர்களால் வழி காட்ட முடிந்தது. அவ்வழியைக் கண்டும் அவ்வழிக்கு வாராதவர்களைக் கண்டு அவர்கள் சிரித்தார்கள். உலகின் பொய்மையையும் பேதைமையையும் கண்டு அவர்கள் எள்ளி

நகையாடினார்கள். சிறு பிள்ளைகள் மண்ணிலே வீடுகட்டி விளையாடுவதற்கும் வளர்ந்த மனிதர்கள் இல்லறம் நடத்தித் தம்மை உணராமலிருத்தற்கும் அதிக வேறுபாடு இல்லை யென்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அவர்கள் உண்மை யைக் கண்டவர்கள். அதனால் இன்னும் உலகம் சரியாக அவர்களைப் புரிந்து கொள்ளவில்லை.

III பாரசிகப் புலவன் உமார்கய்யாம்

உமார் கய்யாத்தைப் பற்றி உலகம் நன்கறியும், அவனைச் சித்தர்களைப் போல் யாரும் மறந்துவிடவில்லை. அவனது பாடல்கள் அறிஞர்களால் போற்றிப் புகழப் படுகின்றன. அவனது கொள்கைகள் பெரும்பாலோர்க்குப் பிடித்திருக் கின்றன. உலகின் பெரும் பான்மையான மக்கள் அவனது வழியிலேயே வாழ ஆசைப் படுகின்றனர். ஏனென்றால் அது சுலபமானது. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வரையறை அற்றது.

"உலகம் என்பது செல்லரித்துப் போன ஒரு பழைய புத்தகம். அதன் முதற் பகுதியும், கடைப் பகுதியும் காணாமற் போய்விட்டன" என்று உலகத்திற்கு விளக்கங் கொடுத்தான் இன்னொரு பாரசிகக் கவிஞன். இது அவனது மயக்க உணர்வின் பிரதிபலிப்பு. இந்த மயக்க உணர்வையே நாம் உமரிடமும் காணுகின்றோம். "ஏதோ, எப்படியோ இவையெல்லாம் இருக்கின்றன. இவைகளுக்கிடையில் நாமும் இருக்கின்றோம். இவற்றுள் எவற்றை அனுபவித் தால் நமக்கு இன்பம் கிடைக்கின்றதோ அவற்றை அனுபவிப்போமே" என்று அறிவால் எண்ணிப் பார்த்து விடைகாணாத பனத்தின் முடிவையே உமரின் தத்துவமாக நாம் காணுகின்றோம். கரை காணாத தெப்பத்தைப் போல அவன் அலமருகின்றான். பாலைவனத்தில் பாய்ந்த ஆறு போல மாயையுள்ளே அழுந்தி விடுகின்றான். இங்ஙனம் கரைகாணாது தவிக்கும் உயிரோலத்தை இவனது பாடல் முழுதும் கேட்க முடிகின்றது,

"காகம் கரைதல் கேளீரோ? கதவைச் சற்றே திறவீரோ?
ஆக இரண்டு கணப்பொழுதுக்கு அப்பால் இங்கே
தங்கோமே!
தேகம் அலுத்துச் செல்வோமே சென்றால் மீண்டும்
வாரோமே!
வாகின் அமைந்தசாலை இதன்வாயில் காக்கும் காவலரே!

மறுபிறப்பில் நம்பிக்கை இல்லை. இப்பிறப்பின் முதலும் முடிவும் என்ன என்பதும் புரியவில்லை. இந்த நிலையில் என்ன செய்வது?

"இருக்கும்காலம் சிறிதேயாம் இதனுள்இன்பவாழ்வினையாம்
பெருக்குமளவு பெருக்கிடுவோம் பிழையதனால் உண்டோசொல்!
உருக்கும் பாடல் கேளாமல் உண்ணும் மதுவும் உண்ணாமல்
பொருக்கு மண்ணில் மண்ணாகப் புதைந்து
போனால் என் செய்வோம்.

ஆம் நல்ல மதுவை உண்ணுவதும், பாடலைக் கேட்டு மெய் மறப்பதுந்தான் இதற்கு வழி. எவ்வளவு முடியுமோ அவ்வளவிற்கு இன்பத்தைத் துய்த்து விடுவோம். நாளை என்பது நமது கையில் இல்லை, இன்று என்பதுதான் உண்மையாக இருக்கின்றது. நேற்று என்பதோ கடந்து போன பலகோடி ஆண்டுகளின் வெள்ளத்தில் கலந்து விட்டது. எனவே

"சின்னஞ் சிறியன் மதுவுண்டு
திரியும் லோலன் என்றுள்ளம்
கன்னக் கன்னப்பேசி எனைக்
கலங்கச் செய்வார் கருணையிலார்"

அவர்கள் கிடக்கட்டும்,

"நின்றதுயரம் நீங்கிடவே நேரும் துயரம் மாறிடவே
இன்றிக்கிண்ணம் நிறையஎனக்கு இனியமதுநீ வார்த்திடம்மா

அன்றி நாளைக்கென்பாயேல் அந்த'நாளை' வருமுன்னம்
சென்றகோடி ஆண்டுகளில் சேர்ந்தொன்றாகிப் போவேனே

இதுதான் இன்பம். இப்படிப் பேசினாலும் உமருக்கு 'இறைவன் உளன்' என்பதில் கொஞ்ச நம்பிக்கை இருந்திருக்கின்றது. எனவேதான்

"எல்லாம் இங்கோர் சூதாட்டம்
இரவும் பகலும் மாறுட்டம்
வல்லான் விதியே ஆடுமகன்
வலியில் மனிதர் கருவிகளாம்
சொல்லாதெங்கும் இழித்திடுவான்
சோடி சேர்ப்பான் வெட்டிடுவான்
செல்லா தாக்கி ஒவ்வொன்றாய்த்
திரும்ப அறையில் இட்டிடுவான்"

என்று பாடுகிறான். ஆனால் இந்த இறை நம்பிக்கை எந்த அளவிற்கு அவனுக்கு இறைத் தன்மையைப் புரியவைத்தது? இறைவனை ஒரு சூதாட்டக்காரனைப்போல் தான் அவன் நினைத்தான். அந்தப் படைத்தவனாகிய சூதாட்டக்காரன் தன்னை வறிதே படைத்து விட்டான் என்பது போலப் பேசுகின்றான்

"படைத்த மண்ணும் நல்மண்ணே
பழுது நிறைந்த பொய்மண்ணே?
படைத்தமண் நல்மண்ணானால்
பானைஉடைந்து போவதுமேன்?
படைத்த மண்ணில் பழுதுளதேல்
பழிதான எவரைச் சார்ந்ததுவாம்?

நம்மில் பலபேர் இறைவனைச் சாதாரண நிலைக்கு இழுத்து வந்து விடுகின்றோம். ஒரு நல்ல மனிதன் எப்படி இருப்பானோ அப்படி, மனிதனின் அளவிற்கு அவனைக் கொண்டு வந்து நிறுத்தி விடுகின்றோம், நம்முடைய இன்ப

துன்பங்களை அவன் ஆக்குவதாக நினைத்துக் கொண்டு தடுமாறுகின்றோம்! நமக்கு இன்பம் வந்தபொழுது நாம் அவனை மறந்து விடுகின்றோம். துன்பம் வந்த பொழுது அவனை வேண்டி அழுகின்றோம். "தீதும் நன்றும் பிறர் தரவாரா" என்ற புறநானூற்றுப் புலவனின் உட்கிடக் கையை நம்மில் பலபேர் புரிந்து கொள்ளவில்லை.

உமரும் துன்புற்று ஓலமிடுகின்றான். அது வாழ்க்கை யை வெறுமையாக நினைத்தவனது ஓலமாக இருக்கின்றது. வாழ்க்கையின் பொருளைப் புரிந்து கொள்ளாத ஒருவனின் துன்பத் துடிப்பாக இருக்கின்றது. ஒருவனை நீருள் அழுத்திப் பிடித்துக் கொண்டால் மூச்சுவிட முடியாமலும் மேலே வர முடியாமலும் எங்ஙனம் திணறுவானோ அவ்வனம் துடிக்கின்ற துடிப்பை உமார்கய்யாத்தின் பாடல் களின் அடிநாதமாகக் காணுகின்றோம்.

"என்னைக் கேளாது எங்கிருந்தோ
இங்கே தூக்கி எறிந்திட்டான்
என்னைக் கேளாது இன்னுமவன்
எங்கே தூக்கி எறிவானோ?
என்ன செய்வேன்! இக்கொடுமை
ஏழை உள்ளம் மறந்தொழிய
வன்னக் கிளியே! ஒருகிண்ணம்
மதுவை ஊற்றித் தருவாயே!"

மென்மேலும் மயக்கத்தில் அழுந்திப் போவதையே உமர் இன்பமாக நினைக்கின்றான். இப்படிப்பட்ட மயக்க நெஞ்சிற்கு நன்மை தீமையென்ற பாகுபாடு இல்லை.

"வாரிவாரிக் கொடுத்தவரும் வழங்கிடாது வைத்தவரும்
பாரில் மண்ணாய்ப் போனதால் பசும்பொன்னானது அறியோமே
ஊரில் அவர்தம உடலையெடுத்து உரையும் நிறையும் காணாரே
ஓரும் உள்ளத்துண்மையிதை ஊன்றிநோக்கி உணர்வாயே"

சாவு என்பது எல்லோருக்கும் பொதுதானே. அது நல்லவன் தீயவன் என்று பார்ப்பதில்லையே! எனவே இருக்கும் வரை இன்பத்தை அனுபவி. மதுவும் மங்கையும் சொர்க்கம். வேறு எதுவும் அதற்கு இணையில்லை. இப்படிப் பட்ட கொள்கையைப் பற்றிப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் அழகாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

"வாழ்வு பற்றிய இக்கொள்கை நம் மனத்தைக் கவர்கின்றது. ஆனல் இது வெகு அபாயகரமாகவும் உள்ளது. உய்யும் நெறி காணது தவிக்கின்ற ஒரு மனப்பான்மையில் இருந்து இக் கொள்கை பிறந்துள்ளது. இக்கொள்கையைப் பின் பற்றினல் உலக மக்கள் மிருகப் பிராயமாய் முடிந்து விடுவார்கள். நாகரீகமும் மக்களுடைய இன்பமும் தனக்குரிய பொறுப்பை உணரா திருக்கும் ஒருவனது மனநிலையை அடிப்படையாகக் கொண்டு பிறப்பன அல்ல."

எனவே கவிஞன் என்ற முறையில் உமர்கய்யாம் அற்புதமானவன். கலையுணர்வு மிக்க கவிதைகளை அவன் கொடுத்திருக்கின்றான். ஆனல அவன் கொடுக்கும் இனிய கொள்கை சமுதாயத்தின் பெருநோய்க்கு வித்தாகி விடும். சமுதாய அமைப்பு என்பது பொருளற்றதாகவும் நன்மை தீமை என்பன கேலிக் கூத்தாகவும் ஆய்விடும்.

IV இரு வேறு எல்லைகள் :-

சித்தர்களும் உமரும் இருவேறு எல்லைகளில் நிற்கின்றனர். சித்தர் பாடல்களில் சமுதாயம் கொண்டுள்ள நோய்க்கு ஏற்ற இரண சிகிச்சையைப் பார்க்கின்றோம். ஆனல் உமரின் பாடல்களில் நோயாளிக்குக் கொடுக்கக் கூடாத—இனிப்புப் பண்டங்களைக் காணுகின்றோம். சித்தர்களின் கொள்கைகள் கேட்பதற்கும்—பின்பற்றுவதற்கும் கசப்பானவை—கடினமானவை. உமரின் கொள்கைகளோ கேட்பதற்கும்—பின்பற்றுவதற்கும் எளிமையானவை—இன்பகாமான தோற்றமுடையவை. உமரின் கொள்கைகள்

இரசிய நாட்டின் சதுப்பு நிலங்களில் காணப்படும் 'கருசா' என்ற மாயப் படுகுழிகளைப் போன்றவை. அப் படுகுழிகள் கண்டோரை ஈர்க்கும் வண்ணப் பூக்களையும் எழிலையும் கொண்டு மிளிருமாம். அந்த அழகில் மயங்கி அங்கு போனால், அதன் மேற்பரப்பு விலகிக் கொள்ள, சென்றவர் உள்ளே புதைந்து விடுவர். பிறகு அது தன்னிலையை அடைந்து விடும். அதுபோல உமரின் கொள்கைகள் புலன்களுக்கு இன்பங்கொடுத்து-மனித வளர்ச்சியை அழிப்பவை.

ஆகவே நம் சித்தர்களின் மேலாம் நெறியுணர்ந்து அதன்படி நடந்து நம் வாழ்வை மேலோங்கச் செய்வோமாக.

உ

பூமிமேல் புகழ்தக்கபொருள்

நெல்லை. R. S. இராமலிங்கம்.

பிள்ளைக்கனியமுதே!
பேசும் பொற்சித்திரமே!
அள்ளி அணைத்திடவே என்முன்
ஆடிவருந்தேனே!

என்று பச்சிளங் குழந்தையைப் பாரதியார் பாராட்டுகின்றார். "குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொற்கேளா தவர்" என்று மழலைபேசும் குழந்தையின் மகிமையைத் திருவள்ளுவர் புகழ்கின்றார். ஆயிரம் கொடுத்தாலும் என் பிள்ளையைப்போல் வராது என்று பெற்றோர் தம் மக்களைப் போற்றுகின்றனர். காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு தானே!

"இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்னும் சொற்கள் அகத்தில் பணிசெய்யும் மனையாளின் மாண்பை அறிவிக்கும். அன்பு தருவதில் அன்னைக்கு இணையானவர் யாருமே இலர் என்பது உலகினர் கண்ட உண்மையாகும். குழந்தை கண்ணில நீர் வழிந்தால் தன் கண்ணில் உதிரங்

கொட்டுவாள். அருமைக்குழந்தையை வளர்க்க அவள் பட்ட பாட்டையெல்லாம் நினைத்துப் பார்த்தால் அன்னைக்கு ஒரு கோயில் அமைத்துப் பொன்னால் வடிவமுஞ் சமைத்து வைத்து நாளும்வழிபட்டுச் செய்யுள் மொழிநதாலும் போதிய கைம் மாறு புரிந்ததாக ஆகாது என்று பெரியோர் கூறுவர்.

உயிர் ஓவியம் போல உயர்ந்த சித்திரம் வரையும் சிறந்த கலைஞரையும், எதிரே நின்று பேசுவதுபோல் எழில் மிக்க உருவத்தைக் கல்லிலும், செம்பிலும் அமைத்துத்தரும் சிற்பி களையும் வியந்து புகழ்ந்து வாழ்த்துகிறோம்.

ஊனும் உள்ளமும் உருக உயரியகீதம் பாடும் பாகவத சிகாமணிகளையும் நாம் போற்றுகின்றோம்.

பாரதபூமி புண்ணியபூமி; இங்கு எழில்மிகு சிற்பங்கள் நிறைந்த எண்ணிலாச் சிவாலயங்கள் வானளாவிய கோபுரங் களுடன் விளங்குகின்றன. பாரதத்தின் மேன்மையை மேனாட்டாரும் போற்றுகின்றனர்.

இவ்விதம் மக்களையும் மாதரையும் மண்ணையும் பொன்னை யும் மற்றுமுள்ள பொருள்களையும் புகழ்ந்துபேசுவது இவ்வுலக இயற்கையாக இருக்கிறது. ஆனால் இவற்றிற்கெல்லாம் மேலாகப் பூமிமேல் புகழ்தக்க பொருள் ஒன்று உண்டு என்பது அனைவரும் அறிந்ததே. அதுதான் அங்கிங்கெனாத படி எங்கும் பிரகாசமாய் அருளொடு நிறைந்த பரம் பொருள்! அது அன்பினில் விளைந்த ஆரமுது! அதனையே பல திருநாமங் கொண்டு பலரும் போற்றுகின்றனர்.

ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரந்
திருநாமம் பாடி நாம் தென்னேணங் கொட்டாமோ!

என்பது மணிவாசகரின் திருவாசகம். அதனையே அப்பர் பெருமான்,

பூமிமேல் புகழ்தக்க பொருளே!

என்று வாயார மனமார வாழ்த்துகின்றார். அது என்றும் அவன் என்றும் அவள் என்றும் சொல்ல நின்ற பரம் பொருளைப் பெரும்பாலும் பக்தர்கள் ''அவன்'' என்றே போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

'ஈறிலாதவன் ஈசன் ஒருவனே' என்றபடி அவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன்; தனக்கிணையில்லாத்தனிப்பெருந்

தலைவன். விண்ணும் மண்ணும் தொழ நின்ற முதல்வன்; தேவதேவன்; பொன்னும் மணியும் போகமுந் தருபவன்; கல்லினுள் தேனாக்கும் கருப்பையுள் முட்டைக்கும் விருப்ப முற்று அமுதளிக்கும் மெய்யன்; நிலம், நீர், தீ, காற்று ஆகாயம் எல்லாவற்றிலும் எங்குமாய் நிறைந்து விளங்குபவன்; உலகில் 'எண்பத்து நான்கு நூறு ஆயிரமாம் யோனிபேதம் நிரை சேரப்படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் ஆங்காங்கே நின்றவன்; அவன் அருள் வெளிக்குள்ளே அனந்தகோடி அண்டங்கள் எல்லாம் அடுக்கடுக்காய் நிலை குலையாமல் நின்று இயங்குகின்றன.

மக்கள் வாழ மண்ணுலகந் தந்த மகாதேவன் ஆறுகளையும் மலைகளையும் அமைத்து நீர்வளமும் நிலவளமுந்தந்து உணவுப் பொருள்களும் கனிவர்க்கங்களும் விளைவிக்க வழி செய்தான். அவனை அர்ச்சித்து வழிபட நறுமணமிக்க மலர்களையும் உடற்பிணி தீர்க்க உதவும் மருந்துச் செடிகளையும் மண்ணிலே அமைத்துள்ள சிறப்பு சொல்லொணு மகிமை வாய்ந்தது. ஆடும் மயில்! கூவுஞ் சேவல்! இவைகளின் அழகுதான் என்னே! இன்னமும் எண்ணற்ற சீவராசிகளின் எழில்மிகு வனப்பையெல்லாங் காணும்போது இறைவனின் படைப்பின் அற்புதம் இனிது விளங்கும்.

இறைவன் படைத்த பொருள்களைக் கண்டு இறைவனே பெருமிதங் கொண்டான்! 'உலகம் படைத்து உகந்தான்' என்பது அப்பர் அருளிய திருவாக்கு. இவ்விதம் சகல செல்வங்களையுந் தந்த சிவபெருமானை "பூமிமேல் புகழ் தக்க பொருள்" என்று போற்றிப் புகழும் அருமையை அடியில் வரும் கவியில் அழகுறக் காணலாம்.

நின்னுவார் பிறரின்றிநீயே யானுய்!
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்துமானுய்
மன்னுனுய் மன்னவர்க்கோர் அமுதம் ஆனுய்!
மறை நான்கும் ஆனுய் ஆறங்கம்ஆனுய்!
பொன்னுனுய்! மணிஆனுய்! போகமானுய்!
பூமிமேல் புகழ்தக்கபொருளே! உன்னை
என்னுனுய் என்னுனுய் என்னினல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்துகேனே!

கல்லும் கனியத் திருவருள் புரியும் கடவுள் இயல்பை இதில் நாவுக்கரசர் நன்கு விளக்கியுள்ளார். "ஒப்புடையான்

அல்லான்; ஓர் உவமன் இல்லி "ஆதலால்" நின்னுவார் பிறரின்றி நீயேயானாய்!" என்றும், அடுத்து நினைப்பவர் உள்ளத்தில் அவன் நல்வித்தாகி நின்று நற்கதிவிளைய நல்லருள் செய்யும் இயல்பைக் கூறி, இம் மண்ணுலகை ஆளும் மன்னவனும இறைவனே என்னும் குறிப்பு தோன்ற "மன்னுனாய்!" என்றும், இவ்வுலக மன்னவர்க்கெல்லாம் இன்னருள் புரிந்து இன்ப வீடு அளிக்கும் தன்மையை விளக்கி "மன்னவாக்கோர் அமுதமானாய்!" என்றும் போற்றுகிறார். நால்வேதமும் பொருள்களும் அருளியவன் இறைவன் ஆதலால், "மறை நான்கும் ஆனாய்; ஆறங்கமானாய்" என்றும் அவனே பொன், மணி எல்லாமாய் நிறைந்து உயிர்களுக்கு இன்பம் அளிக்கும் இயல்பு கருதி பொன்னானாய்! மணிஆனாய்! போகமானாய்! என்றும் விரித்துரைத்து, இவற்றிற்கெல்லாம் சிகரமாகப் பூமிமேல் புகழ்தக்கபொருளே! என்னும் சொற்களைச் செய்யுளில் சொல்வேந்தர் அமைத்துள்ள திறம் சிந்தித்துச் சிந்தித்து மகிழ்வதற்கு உரிய சிறப்பினை அளிப்பதாகும்.

இவ்வுலகப் பொருள்கள் யாவும் நிலையில்லாதவை. இறப்பும் பிறப்பு மில்லாது தனித்தியங்கும் இறைவன் ஒருவனே உண்மையான புகழுக்கு உரியவன் என்பது அவரது திருவுள்ளம்.

இவ்விதம் புகழுக்குரிய பொருளை எவ்வாறு புகழ்வது என்று அப்பர் பெருமான் ஏங்குகின்றார்; பாவம்! "உன்னை எனானாய் என்று சொல்வதல்லாமல் ஏழையேன் என் சொல்லி ஏத்துவேன்! என்று ஆராதகாதலுடன் உள்ளங் குழைந்து அருளியது செவிக்கும் சிந்தைக்கும் இன்பம் பயப்பதாகும்.

அவனைப்பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்று காலமெல்லாம் அவன் புகழையே பேசிக் காலங்கழித்தவர் அப்பர் பெருமான். 'பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெருமானே!' என்றும் 'பிரிவிலா அடியார்க்கு என்றும் வாராத செல்வம் வருவிப்பான்' என்றும், 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்து அருள வல்லான்' என்றும, பலவாறு புகழ்ந்து பாடியும் அவர் மனம் திருப்தி அடையவில்லை. நற்பதத்தார் நற்பதமே! ஞானமூர்த்தி நலஞ்சுடரே! என்னும், 'வேற்றாகிவிண்ணாகி நின்றாய் போற்றி!' "கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி!" கயிலைமலையானே! போற்றி போற்றி! என்றும் இவ்விதம் இணையில்லாத் திருப்பதிகங்கள் நாற்பத்து

ஒன்பதாயிரம் பாடியும் அவனது அருட்குணங்களை உள்ள வாறு உணர்ந்து புகழ்ந்து வழிபட்டதாக அவரது மனம் ஆறு தல் அடையவில்லை.

"நீ ஞானசொரூபி! அடியேன் ஞானமில்லாதவன். செவ்வாய செல்வம் தருபவன் நீ! அடியேன் ஏழை! என்னால் உன்னை எவ்வாறு புகழ முடியும்? உன்னைப் புகழ்வதற்குரிய சொற்களை நீ அன்றோ அருளவேண்டும்.'

என்னானாய் என்னானாய் என்னினல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்துகேனே!

திருமாலும் நான் முகனும் உன்திருமேனியைக் கண்டவர் கள். ஆயினும் அவர்கள் தேடும்போது அடியையும் முடியை யும் காணமுடியவில்லை! காணுவதற்கரியகனலாய் நிமிர்ந்தீர். அந்நிலையில் நீ என்னானாய்? என்னானாய்?

அடியவர்க்கு எளிதில் வந்து அருள் செய்யும் நீ விண்ணுலகத் தேவர்க்கும் மூவர்க்கும் அருமறைகளுக்கும் எட்டாது என்னானாய்? என்னானாய்?

அன்று அடைக்கலம் என்று வந்தடைந்த மார்க்கண்டே யனைக்காக்கும் பொருட்டு, இங்குற்றேன் என்று இலிங்கத் தில் தோன்றிக் காலனைக்காலால் கடிந்து அருள் செய்த நீ என்னானாய்! என்னானாய்!

"சொல்லடா! நீ சொல்லும் அரி எங்கு இருக்கின்றான்!' என்று இரணியன் இறுமாந்து கேட்கவும் அரி ஓம் நம என்று சிந்தித்து வந்த அறியாச் சிறுவன் பிரகலாதன் "அவன் எங்கும் இருக்கின்றான்; தூணிலும் உளன் துரும்பிலும் உளன்" என்று மறுமொழி கூறினான்.

"இதோ! இந்தத்தூணிலும் உளனோ!" என்று உன் பெருமையை அறியாத இரணியன் அற்பமாக எண்ணி அருகில் நின்ற தூணைக்காலால் உதைக்க, கல்தூண் வெடிக்க, கண்டவர் வியக்க, நரசிம்ம மூர்த்தியாய் வந்து, இரணியனை வதஞ்செய்து சிறுவனுக்கு அருள்செய்த நீ, இப்பொழுதும் உன்னை மறவாது துதிக்கும் ஏழையேன்முன் வாராது நிற்கும் நீ என்னானாய்? என்னானாய்?

இவ்விதமெல்லாம் கேள்வி கேட்பதுபோல், என்னானாய் என்னானாய் என்று வாக்கின் வேந்தர் இறைவனை வழிபடும் இயல்பு அன்பர்கள் உள்ளத்தை உருக்குவதாகும்.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும்" என்று ஞானசம்பந்தர் அருளிய திருவாக்கும் இங்கு சிந்திக்கத்தக்கது.

தம்மையே புகழ்ந்து இச்சைபேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலார்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!

என்று நம்பி ஆரூரர் நமக்கு அருளிய நல்லுபதேசத்தையும் நன்கு சிந்தித்து அவன் புகழையே பாடிப் பரவி நாம் உய்வோமாக. சில காலம் இருந்து மறையும் சீவர்களைப் புகழாது, என்றுமுள்ள பரம்பொருளையே ஏத்திப் போற்றி வணங்க வேண்டும்.

திருப்போரூர்—சிதம்பர சுவாமிகள்

(மு. அ.)

தமிழ் நாட்டில் நூற்றாண்டுதோறும் மிகச் சிறந்த புலவர்களும் பக்தி மிகுந்த அடியார்களும் தோன்றியிருந்தார்கள். அடியவர் சிலர் பக்திப் பெருக்கோடு சிறப்பான தோத்திரப் பாடல்கள் பாடியும், ஞானோபதேசம் செய்தும் ஞானசாத்திர உரைகள் செய்தும், ஞானபரம்பரையை வளர்த்தும் வந்திருக்கிறார்கள். இவர்களுள் மிகச் சிறந்த ஒரு ஞானியாவார் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்.

சிதம்பர சுவாமிகள் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவருடைய வரலாறு பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது. மதுரையில் தோன்றிய இவர் பெரும் புலவராய்ச் சிதம்பரக்கவிராயர் என்று பெயர் பெற்றிருக்கிறார். அவிநாசிக்கருகே ஒரு செல்வர் வீட்டில் தமிழாசிரியராய் வாழ்ந்து வந்த போது, திருமுதுகுன்றம் குமாரதேவருடைய அருளுக்குப் பாத்திரமானார். அவர் இவரைத் தமது குருவாகிய பேரூர் சாந்தலிங்க சுவாமியிடம் அழைத்துச்

சென்றார். அந்த சுவாமி இவரிடத்தில் விளங்கிய புலமையையும் சாத்திர ஞானத்தையும் கண்டு, தாம் செய்த வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், கொலைமறுத்தல், அவிரோத உந்தியார் என்ற நான்கு நூல்களையும், கண்ணுடைய வள்ளல் செய்த ஒழிவில் ஒடுக்கம் என்ற நூலையும் கொடுத்து, "இவற்றிற்கு உரை செய்" என்று கட்டளையிட்டார். அப்படியே இவரும் நன்கு உரை செய்து சாந்தலிங்கருடைய பாராட்டுதலையும் பெற்றார். இவ்வுரைகள் இன்றும் வழக்கத்தில் உள்ளன. மேலும் இவர் திருவாசகத்தில் "புணர்ப்ப தொக்க" என்ற பாடலுக்கு உரையும், திருவெம்பாவைக் கருத்தும் எழுதியதாக இன்றும் வழக்கில் உள்ளன. பின்னர் இவர் திருவருள் குறிப்பு உணர்ந்து மதுரை மீனாட்சி அம்மையின் அருளை நாடி அம்மைமீது கலிவெண்பாப் பாடினர். பின்னர் மயில் வடிவமாகத் தோன்றி அம்மையார் கட்டளை இட்டவாறு, சென்னை அருகிலுள்ள திருப்போரூர் சென்று, அங்கு மறைந்திருந்த முருகன் திருவுருவை வெளிப்படுத்தி, ஆலய நிர்மாணம் செய்தார். அன்பர்களுக்கு உபகாரமாக இவர் நிகழ்த்திய அற்புத நிகழ்ச்சிகள் அநேகம். திருப்போரூர் முருகன் மீது எழுநூற்றிருபத்தாறு பாடல் கொண்ட உருக்கமான சந்நிதி முறை பாடினார். தம் குருவின் மீது நெஞ்சுவிடு தூது பதிகம் போன்றனவும், திருக்கழுக்குன்ற வேதகிரீசர் பதிகமும், பஞ்சதிகார விளக்கம் என்ற ஒரு சாத்திரமும் செய்தார்.

சுவாமிகள் செய்த நூல்களில் முருகனுக்குப்பாடிய திருப்பள்ளியெழுச்சி முக்கியமானது. முருகன் தாலாட்டுப்பாடல் மற்றொரு சிறப்பான பாடல். முப்பது ஆண்டுகளுக்கு முன்னே தமிழ்நாடெங்கும் வீணை தனம்மாளின் பேத்தியான பாலசரசுவதி பாடி ஆடிய பின்வரும் தாலாட்டுப்பாடல் அபிநயத்தைக் கண்டு குழந்தை முருகனிடம் நெஞ்சைப் பறிகொடுக்காதவர் யாரும் இலர்.

நீலமயில் வாகனனே நெட்டிலைவே லாயுதனே
சோலைநிறை கோழிக் கொடிபடைத்த சேவகனே.

ஆறிரண்டு தோளானே ஆறு முகத்தானே
நேறுமறை கொஞ்சுஞ் சிறுசதங்கைத் தாளானே.

செஞ்சதங்கை கொஞ்சச் சிறுகிண் கிணியாடக்
கஞ்சமலர்த் தாள்உமையாள் கண்களிக்க வந்தானே.

ஆய்மார் அறுவர்களும் அம்பிகையுங் கங்கையின்னுஞ்
சேயேயென் றேந்திச் சிரமோந்து கொள்குருந்தோ.

பிரமன் அறியாப் பிரணவத்தின் அத்தம்
அரனுர் செவிகுளிர அன்றுரைத்த சற்குருவே.

அக்காலத்தில் இத்தாலாட்டு வரிகள் சிதம்பர சுவாமிகள் செய்தவை என்பதை ஒருவரும் அறியமாட்டார். அபிநயத்துக்குப் பொருத்தமாக இசையும், சொற்சுவையும், பொருட்சுவையும் பொருந்தியிருந்தன என்பது இவர் கவிதைக்குரிய பெரும் சிறப்பு.

சிதம்பர சுவாமிகளுடைய பாடல்களைத் தமிழ் நாடெங்கும், சிறப்பாகச் சென்னையில், மிகுதியாகப் பிரசாரம் செய்தவர் ஞானியார் சுவாமிகள். மிகப்பல பாடல்களை அவர்தம் பிரசங்கத்தில் சொன்னபோது, கண்ணீர் தாரை தாரையாக ஒழுகக் கேட்டு உருகாதவர் இருக்க முடியாது. இரண்டொரு பாடல்களை இங்கே குறிப்பிடுவோம்.

நரயேனுன் சீரடிக்கு நன்கல்ல செய்தாலும்
பேயேன் இழைத்த பெரும்பிழையை—நீயே
பொறுத்தாள்வ துன்கடனும் போரூரா என்னை
ஒறுத்தா லெனக்கார் உறவு.

இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லேன் நாயினேன்—சொல்லறத்தின்
ஒன்றேனும் இல்லேன் உயர்ந்ததிருப் போரூரா
என்றேநான் ஈடேறு வேன்.

ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே—நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற ஆறுநீ பேசு.

இப்பாடல்களை இன்று பாடக்கேட்டாலும் நம் உள்ளம் நெக்கு உருகும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு சிறந்த துதிநூலாக விளங்குவன சிதம்பர சுவாமிகளுடைய பாடல்கள். மிகஎளிதாகத் தமிழ்மொழி இவருக்கு ஏவல் செய்வது பாடிப்பாடி வியக்கத்தக்கது.

சுவாமிகளுடைய நூல் தொகுதியை திருப்போரூர் கந்தசாமி தேவஸ்தானத்தார், மிகவும் திருத்தமாக அச்சிட்டு வெளியிட்டு இருக்கின்றனர். சித்தாந்தம் துணை ஆசிரியர் அம்பை வித்துவான் இரா. சங்கரன் அவர்கள மிகவும் அரிதில் முயன்று, பதிப்பு வரலாறு தொகுத்து, சுவாமிகள் வரலாறும் எழுதி, ஆதீன பரம்பரை வரலாறும் சேர்த்துத் தக்க குறிப்புரைகளோடு திருத்தமாகப் பதிப்பித்திருக்கிறார். சைவ மக்கள் அவருடைய சேவையை நிரம்பப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

[திருப்போரூர்ச் சந்நிதி முறைகளும் பிறநூல்களும், குறிப்புரையுடன், கந்தசாமி தேவஸ்தானம், திருப்போரூர் செங்கல்பட்டு மாவட்டம். பக்கங்கள் 32+280. விலை ரூபா இரண்டு.] வேண்டுவோர் தேவஸ்தானத்தார்க்கு எழுதிப் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதிப்புரை

'திருநீறும் திருவைந்தெழுத்தும்' என்னும் நூல் வரப்பெற்றோம். இந்நூலில் நம் திருமுறைகளில் திருநீறு பற்றிக் கூறும் பதிகம் ஒன்றும் திருவைந்தெழுத்து பற்றிக் கூறும் பதிகம் நான்கும் திருத்தொண்டத் தொகைப்பதிகம் ஒன்றும் ஆக 6 பதிகங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த ஆறு பதிகங்களும் சைவப் பெருமக்களால் மிகவும் போற்றப் பெறுந்தகையன. தினந்தோறும் திருநீறு பூசும் போதும் திருவைந்தெழுத்தினை எண்ணும்போதும் இப்பதிகங்களில் ஒரு பாடலையேனும் நாடோறும் ஓதி செயன்முறையில் ஈடுபடல் பெரிதும் பலன் பயக்கும் இது கோவை மாவட்டம் தொண்டாமுத்தூரில் புகழுடல் எய்திய திரு T. M. ஆறுமுக முதலியார் அவர்கள் நினைவாக 18-3-69 அன்று காசிஞ்

ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆசியுடன் வெளியிடப் பெற்றது. சைவர்கள் வீட்டில் அவசியம் இருக்க வேண்டியதோடு தினமும் படித்துப் பரவத்தக்கது இந்நூலாகும். விலை குறிக்கப்பெறவில்லை. நூல்கிடைக்குமிடம்:-

A. நடராஜன்
S/o. T. M. ஆறுமுக முதலியார்,
தொண்டாமுத்தூர், கோவை-2.

என்பதாகும். யாவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக (அம்பை)

பாராயணத் திரட்டு என்னும் நூல் வரப்பெற்றோம். இதில் விநாயகரகவல், சண்முக கவசம், சிவபுராணம், பகை கடிதல் முதலியன இடம்பெற்றுள்ளன. கிறித்தவ சபைகள் தங்கள் சமய உண்மைகளை வெளியீடுகள் வாயிலாய்ப் பன்னூருயிரக் கணக்காக அச்சிட்டுப் பொதுமக்களுக்குக் கொடுத்துத் தங்கள் சமயத்தைப் பரப்புகின்றன. நம் சமய சபைகளும் அப்பணியிலீடுபடல் நலம். அதிலும் தனிப்பட்ட சைவப் பெருமக்களும் இப்பணியிலீடுபட்டால் அதுமிகவும் போற்றத்தக்கதாகும் இந்நிலையில் புரசைப்பாக்கம் முத்தையா செட்டியார் உயர் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் திரு பி. சொ. சண்முகம் பிள்ளையவர்கள் தம் 60 ஆம் ஆண்டுத் தொடக்க நாள் வெளியீடாகவும் மணிக்கிராமம் திரு சிதம்பரம் பிள்ளை திருமதி அலர்மேல் ஆயச்சி சிதம்பரம் பிள்ளை நினைவு வெளியீடாகவும் பல்லாயிரம் நூல்கள் வெளியிட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கி மக்களைப் பக்தியில் திளைக்கச் செய்வது போற்றுதற்குரியதாகும். இத்திரட்டில் காணப்பெறும் பாக்கள் நித்தியப் பாராயணத்துக்கு மிகவும் உகந்தவையாகும் ஆகவே யாவரும் இந்நூலை வாங்கிப் படித்து பெருமானருளுக் குரித்தானவர்களாக வேண்டுகின்றோம். நூல் கிடைக்குமிடம்:—

வித்துவான் பி சொ சண்முகம் பிள்ளை
மீனாட்சி ஞான நிலையம்,
44C/2, வேளாளர் தெரு புரசை, சென்னை–7.

என்பதாகும். 10 காசு தபால் தலை அனுப்புவோருக்கு நூல் இலவசமாக அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பெறும்.

(அம்பை)

இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் வயிரவிழா மலர் வரப்பெற்ரும். நம் தமிழகத்தில் சைவசமய மேம்பாடு குறித்துத் தொண்டாற்றிய சபைகளுள் இச்சபையும் ஒன்று என்பது யாவரும் அறிந்ததே.

இச்சபைக்குத் தமிழகச் சைவான்ருேர்கள் பலரும் வந்து தங்கள் அருளுரைகளை வழங்கியிருக்கின்ருர்கள். திரு. வி. க., திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை முதலிய அறிஞர் பெருமக்களால் போற்றி வளர்க்கப் பெற்ற இச்சபை வளர்ந்தவிதம், ஆண்டு விழாத் தலைவர்கள், சபைத் தலைவர்கள் முதலிய பல விவரங்களும் இம்மலரில் அடங்கியுள்ளன. இச்சபையைத் தோற்றுவித்த பெருமைக்குரித்தானவர் ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற் பிள்ளையவர்களாவர். அப்பெரியாரே திரு வி. க. அவர்களின் ஆசிரியர் என்பது அறிஞருலகம் அறிந்ததே: திரு வி. க. அவர்கள் முதன் முதல் எழுதத் தொடங்கியது தம் ஆசிரியர் வரலாறேயாகும், அதை திரு. வி. க. தம் கன்னி முயற்சி என்று குறிப்பிடுகின்ருர். அப்புலவரால் எழுதப் பெற்ற ஸ்ரீலஸ்ரீ கதிரைவேற் பிள்ளையவர்கள் சரித்திரம் இம்மலரின் பிற்சேர்க்கையாக அமைந்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். திரு வி. க. அவர்களின் இளமைப்பருவ இலக்கிய எழுத்து நடையைத் தெரிந்து கொள்ள இந்நூல் ஒரு சான்று. கடின சந்திகளைப் பிரித்து இம்மலரில் அச்சிடப்பட்டுள்ளது. அவசியம் இந்நூலை யாவரும் படித்தின்புறவேண்டும். டிம்மியளவில் 102 பக்கங்கள் கொண்ட இம்மலரின் விலை குறிக்கப்பெற

வில்லை. 25 காசுகள் அஞ்சல்தலை யனுப்பின் வேண்டுவோருக்கு இம்மலர் இலவசமாக அனுப்பிவைக்கப்பெறும். பணம் அனுப்பவேண்டிய முகவரி·—

செயலாளர்,
ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை,
3, மொபரீசு ரோடு,
இராயப்பேட்டை, சென்னை–14.

என்பதாம். யாவரும் பெற்றுப் பயன்பெறுக.

(அம்பை)

காவேரிப்பாக்கத்தை யடுத்த இராமாபுரம் மாணிக்கவாசகர் மன்றம் முதலாம் ஆண்டு விழா மலர் வரப்பெற்ருேம். இதனுள் திருவாசகத்தைப் பற்றிய மூன்று கட்டுரைகளும் திருவாசகத்திரட்டு என 34 பாக்களும் மாணிக்கவாசகர் துதிப்பாடல்களும் திருவாசகப் பெருமை பற்றிக் கூறும் பாடல்களும் அடங்கியுள்ளன. கிரௌன் அளவு 24 பக்கங்கள் கொண்ட இம்மலர் திருவாசகப் பெருமையைப்பற்றித் தெரிவித்து அதனைப் படிக்கத் தூண்டுகோலாயமைவது திண்ணம். இதன் விலை குறிக்கப்பெறவில்லை. இது வேண்டுவோர் 35 காசுகள் அஞ்சல் தலையனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம், பணம் அனுப்ப வேண்டிய முகவரி :-

R. K. சச்சிதாநந்தம்.
பரஞ்சோதி நிலையம்,
16, கிருஷ்ணமாச்சாரி தெரு,
சுபாஷ் நகர்,
குரோம்பேட்டை,
சென்னை-44

என்பதாம். யாவரும் பெற்றுப் படித்தின்புறுக.

(அம்பை)

வாழ்க மணமக்கள்

திருவாலங்காடு திரு. T. M. சபாபதி தேசிகர் அவர்கள் திருமகனுர் திருவளர் செல்வர் T. S. தேவசேனுபதிக்கும் T சண்முக தேசிகர் அவர்கள் திருமகள் திருவளர் செல்வி சௌந்தரம் அம்மையாருக்கும் திருமணம் திருவாலங்காட்டில் 2—6—69 அன்று மிகச் சிறப்புற நிகழ்ந்தது.

திரு T. N. நடராஜபிள்ளை அவர்கள் திருமகனுர் திருவளர் செல்வர் T. N. சாந்தகுமார் எம். பி., பி. எஸ். அவர்களுக்கும் J M. நல்லசாமி பிள்ளை அவர்கள் அருமைத் திருமகனுரின் பேர்த்தி திருவளர் செல்வி சொர்ணும்பாள் பி. எஸ்ஸி. அவர்களுக்கும் தி. நகர், பசுலுல்லா ரோடு மகாலட்சுமி கல்யாண மண்டபத்தில் 6-6-69 அன்று திருமணம் மிகச் சிறப்பாய் நிகழ்ந்தது.

சேலம் பொத்தனுர் பெத்தண்ண பிள்ளை அவர்கள் குமாரர் திருவளர் செல்வர் பெ. சண்முகம் எம். ஏ., அவர்களுக்கும் ஈரோடு பழநியப்ப பிள்ளை அவர்கள் குமாரி திருவளர் செல்வி செயலட்சுமிக்கும் (எம். ஏ., பி. டி.) திருமணம் ஈரோட்டில் 9—6—69 அன்று மிகச் சிறப்புற நிகழ்ந்தது.

குடந்தை திரு. மகாலிங்கம் செட்டியார் I. A. S. (ஓய்வு) அவர்கள் மைத்துனர் மகனுர் திருவளர் செல்வர் M. முருகேசனுக்கும் குடந்தை திரு. சு. சுவாமிநாதச் செட்டியார் அவர்கள் மகளார் திருவளர் செல்வி வசந்தா அம்மையாருக்கும் திருமணம் 27-6-69 காலை கும்பகோணத்தில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது

சென்னை மேயர் கம்பெனி உரிமையாளர் திரு. R. மாசிலாமணி முதலியார் அவர்கள் குமாரி திருவளர் செல்வி வசந்தா தேவிக்கும் ஆர்க்காடு திரு. V. C. பாலகிருஷ்ண முதலியார் அவர்கள் குமாரர் திருவளர் செல்வர் பாலதிவாகராஜன் பி. ஏ. க்கும் ஆபட்ஸ்பரி மாளிகையில் 2—7—69 புதன் அன்று திருமணம் சிறப்புற நிகழ்ந்தது. சமாஜச் சார்பில் வாழ்த்திதழும் படித்துக் கொடுக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட மணமக்கள் யாவரும் திருச்செந்திலாதிபன் திருவருளால் பன்னலங்களும் பெற்றுப் பல்லாண்டுவாழ அவன் அருள் பாலிக்க வேண்டி வணங்கி வாழ்த்துகின்ரேம்.

காலஞ் சென்ற ஜனாதிபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன்

ஆசிரியர்

ஜனாதிபதி டாக்டர் ஜாகிர்ஹுசேன் மே மாதம் 3-ஆம் தேதி முற்பகல் 11-20 மணிக்கு மாரடைப்பினால் திடீரென்று காலமானார். அவருக்கு அப்போது வயது 72. அந்த நிமிஷம் வரை அவர் ஆரோக்கியமான நிலையில் இருந்தார்.

சுதந்திர இந்தியாவினுடைய மூன்றாவது ஜனாதிபதி இவர். டாக்டர் ராதாகிருஷ்ணன் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இவர் உப ஜனாதிபதியாக இருந்து, அவர் பதவியிலிருந்து விலகியபின், இவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கூட பூர்த்தியாகவில்லை; அதற்குள் சிறந்த கல்வியாளரும் தேசபக்தருமான இவர் இறந்தது இந்தியாவுக்கு ஒரு பெரிய துர்ப்பாக்கியம். இவர் தேசீய சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டு, காந்தியுடன் கல்வித் துறையில் உழைத்தார். காந்தியின் பிரசாரத்தைக் கேட்டு இவர் தமது 13-ஆம் வயதில் கல்விச் சாலையை விட்டு நீங்கி, புதிய கல்விச் சாலையை ஏற்படுத்தினார், கல்வித்துறையில் ஜெர்மனியில் டாக்டர் பட்டம் பெற்றார். பிறகு டில்லியில் ஜமியா மில்லியா இஸ்லாமியா என்ற கல்விச் சாலையை ஏற்படுத்தி, அதை உலகப்புகழ் பெறும்படி செய்தார். வர்தா கல்வித்திட்டம் என்று வழங்கிய ஆதாரக் கல்வித் திட்டத்தை காந்தியின் கருத்துப்படி உருவாக்கியவர் இவரே. அலிகார் சர்வகலாசாலையில் துணை வேந்தராகவும், பீகார் கவர்னராகவும் இருந்தார். காந்தியே என் வாழ்க்கைக்கு வழிகாட்டி என்று பல முறை குறிப்பிட்டிருக்கிறார். 40 ஆண்டுகளுக்கு மேலாகக் கல்வியின் மேம்பாடே தம்முடைய நோக்கமாய் இவர் வாழ்ந்தார். இவருக்குப் பின் ஒரு சிறந்த தலைவரைத் தேர்ந்தெடுக்க இந்திய சமூகம் கஷ்டப் படுகிறது. இந்து முஸ்லிம் வேற்றுமையை மறந்து ஒற்றுமையே சிறந்த லட்சிய மாய்க் கொண்ட சிறந்த மனிதர்களுள் இவரும் ஒருவர்.

1949 இல் நடந்த அகில இந்திய ஆதாரக் கல்வி மகா நாட்டில் நாமும் இவரோடு சிலநாட்கள் நெருங்கிப் பழகும்

வாய்ப்புக் கிடைத்தது. இவருடைய எளிமையும், பேச்சைக் குறைத்துச் செயல் செய்ய வேண்டும் என்ற ஆர்வமும், கல்வி முன்னேற்றமே கருதிய வாழ்க்கையும் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக இருக்கும். சம்பந்தப் பட்டவர்களுக்கு நாம் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எல்லாம் வல்ல இறைவன் இவருடைய ஆன்மாவுக்குப் பேரானந்தப் பெருவாழ்வு அளிப்பாளுக.

சித்தாந்தவித்தகர் கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்களால் நிறுவப்பெற்ற யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவுக்குத் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்ற 21-4-69 அன்று இலங்கை சென்றார்கள். ஆண்டுவிழா 23, 24, 25-4-69 ஆம் நாள்களில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. பின்னர் அவர்கள் ஈழநாட்டுத்தல யாத்திரையையும் மேற்கொண்டதோடு அங்கங்கு பல சமய விரிவுரைகளை ஆற்றி மக்களை மகிழச் செய்தார்கள். பன்னூறு சமயவெளியீடுகளையும் வெளியிட்டு மக்கள் பலன் பெறச் செய்தார்கள். பல கல்விச் சாலைகளிலும் கல்லூரிகளிலும் பல சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்கள். நம் சைவசமயச் சின்னங்களின் பெருமை பற்றிப் பேசியதோடு நூலும் வெளியிட்டுள்ளார்கள். மேலும் நாவலர் ஆச்சிரமத்தில் நால்வர், சேக்கிழார் திருவுருவங்களை நிறுவ அடிக்கல் நாட்டு விழாவும் செய்துள்ளார்கள். பன்னிரு திருமுறைக் கோயில் ஒன்றும் நிறுவி வழிபாடு செய்யச் செய்துள்ளார்கள்.

இவ்வாறு ஈழநாட்டில் சொல்லாலும், செயலாலும் சமயப் பணியைச் செவ்வனே ஆற்றிய பின்னர், 4-6-69 அன்று சென்னைக்குத் திரும்பினார்கள். திரு. செட்டியார் அவர்கள் ஆற்றிய சமயத் தொண்டு மிகப் போற்றற்குரியது. இது போன்று மலேயா, தென்னாப்பிரிக்கா போன்ற இடங்களுக்கும் சென்று சைவமறுமலர்ச்சிப் பணி புரிய அவர்களுக்கு இறைவன் அருள் பாலிக்க வேண்டுகிறோம்.

ஆடித்திங்கள் சிறப்பு நாள்கள்

6	(21-7-69)	சித்திரை – பெருமிழலைக் குறும்ப நாயனார் விழா
7	(22-7-69)	சுவாதி – சுந்தரமூர்த்தி நாயனார் விழா
,,		–சேரமான் பெருமாள் நாயனார் விழா
10	(25-7-69)	கேட்டை – கலிய நாயனார் விழா
,,		–கோட்புலி நாயனார் விழா
22	(6-8-69)	கார்த்திகை – மூர்த்தி நாயனார் விழா
,,		புகழ்ச் சோழ நாயனார் விழா
25	(9-8-69)	திருவாதிரை – கூற்றுவ நாயனார் விழா

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் 40ஆம் ஆண்டு குருபூசை விழா 5-6-69 6-6-69ஆம் நாள்களில் மிகச் சிறப்புறத் திருவான்மியூரில் நிகழ்ந்தது. விழா மலர் வெளியீடு, சிறப்புச் சொற்பொழிவுகள், விசேட அபிடேக ஆராதனைகள், சுவாமிகள் திருவுலாக் காட்சி முதலிய நிகழ்ச்சிகள் போற்றத்தக்கன. மகேஸ்வர பூசையும் நிகழ்ந்தது.

மதுரை திருவாப்பனூர் சைவ சித்தாந்த சபையின் முதலாவது ஆண்டு நிறைவு விழா 6-6-69 முதல் 15-6-69 முடிய மிகச் சிறப்புற நிகழ்ந்தது.

புரசைத் திருநெறிக் கழக 100ஆம் திங்கள் வழிபாடு திருவான்மியூர் மருந்தீசர் திருக்கோயிலில் 22-6-69 அன்று மிகச் சிறப்பாய் நிகழ்ந்தது.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் 15-6-69, 29-6-69ஆம் நாள்களில் காஞ்சிச் சிவதல வார வழிபாடும் 20-6-69ஆம் நாள் காலை திருக்கழுக்குன்றத்திலும் மாலை காஞ்சி கச்சபேசுவரர் திருக்கோயிலிலும் மாணிக்கவாசகர் திருநாளும் 27-6-69 அன்று ஆனி வெள்ளி விழாவும் 25-6-69 அன்று மெய்கண்டதேவ நாயனார் ஆனிச் சுவாதித் திருநாளும் சிறப்புற நிகழ்ந்தன.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட 24-ஆம் ஆண்டு ஆனிமகத் திருமுறை இன்னிசைப் பெருவிழா 17—6—69 முதல் 20-6-69 முடிய திருக்கழுக்குன்றத்தில் மிகச்சிறப்புற நிகழ்ந்தது. பலபெருமக்களின் சொற்பொழிவுகளும் திருமுறை இன்னிசையரங்குகளும் தினந்தோறும் நன்கு நிகழ்ந்தன.

திருத்தணிகையில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 25—6—69 புதன் காலை 9-35க்குச் சிறப்புற நிகழ்ந்தது. பன்னூறாயிரவர் விழாவினைக் கண்டு பெருமானருளைப் பெற்றனர்.

இராமாபுரம் மணிவாசகமன்றத்தின் முதலாண்டு விழா 28—6—69, 29-6-69 ஆம் நாள்களில் சிறப்புற நிகழ்ந்தது. சிறந்த சொற்பொழிவுகள், மாணிக்கவாசகர் திருவீதி உலா, மகேச்சுர பூசை முதலியன நன்கு நிகழ்ந்தன.

நம் சமாஜ மாதக் கணக்குப் பரிசோதகர், செயற்குழு உறுப்பினராயிருந்த திரு. C. V. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் அருமைத் தந்தையார் திரு. C. வாசுதேவ முதலியார் அவர்கள் 23–4–69 அன்று காலமானது தெரிந்து வருந்துகின்றோம். காலம்சென்ற அப்பெரியாரின் ஆன்மா இறைவன் திருவடி நிழலின்புற்றிருக்க அவனருள் புரியுமாறு வணங்குகின்றோம்.

நம் சமாஜ உறுப்பினர் திரு. சுந்தரவடிவேல் முதலியார் அவர்கள் 1-6-69 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர் நம் சித்தாந்தத்திற்கும் ஆங்கிலச் சித்தாந்தத்திற்கும் உறுப்பினர்களைச் சேர்ப்பதில் காட்டிய ஆர்வம் கூறுந்தரத்ததன்று. சமாஜச் சிறப்புக் கூட்டங்களில் கலந்து அவர் எல்லாத் தொண்டுகளிலுமீடுபடுவார். கபாலீச்சுரப் பெருமானைக் காலையும் மாலையும் வணங்காது இருந்ததில்லை. எப்பொழுதும் தக்ஷணாமூர்த்தியின் முன் நிஷ்டையிலிருக்கும் அப்பெரியார் உருவம் நம்மை விடடு மறைந்துவிட்டது. அவர் பிரிவு குறித்து நம் வருத்தத்தை அன்னார் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். காலம் சென்ற அப்பெரியாரின் ஆன்மா இறைவன் திருவடியிலின்புற்றிருப்பதுறுதி. அவர் கடைப்பிடித்த சமய நெறியிலொழுகித் தொண்டுகளாற்றுவதே அன்னாருக்கு நாம் செய்யும் நன்றியாகும். அப்பெரியாரின் திருநாமம் நீடுவாழ்வதாக.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madrds by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Publishea by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.